தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி - IV

(காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -IV)

பொதுப்பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.

ஆணையர் (பொ)

பதிப்பாசிரியர்

இரா. சிவானந்தம்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2013 - திருவள்ளுவர் ஆண்டு 2044

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் - 43

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**Tamilnattu Kalvettukal Vol.IV**
General Editor	:	**Dr. S. VASANTHI** M.A., M.Phil., Ph.D.
Copyright	:	Tamilnadu State Dept. of Archaeology
Subject	:	EPIGRAPHY
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	263
Year	:	2013
No. of Copies	:	1000
Type Point	:	12
No. of Pages	:	248
Paper Used	:	80 Gsm Maplitho
Printer	:	**The Chennai Printer's** Industrial co-operative Society Limited, No. 6, Pycrofts Road, (Bharthi Salai) Triplicane, Chennai-600 005
Publisher	:	**State Dept. of Archaeology,** Tamil Valarchi Valaagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 103

உள்ளடக்கம்

வ.எண்		பக்க எண்
	பதிப்புரை	i-ii
	முன்னுரை	iii-x
1.	சிவபுரம்	1
2.	இடையார்பாக்கம்	49
3.	கூரம்	55
4.	காஞ்சிபுரம் - சொக்கீசுவரர் கோயில்	70
5.	திருப்பருத்திக்குன்றம்	72
6.	பள்ளன்கோயில் செப்பேடு	87
7.	தாங்கி	92
8.	கருங்குழி	96
9.	ஆலம்பரை	97
10.	கடப்பாக்கம்	98
11.	வேம்பனூர்	99
12.	நல்லூர்	100
13.	ஓணம்பாக்கம்	101
14.	மதூர்	102
15.	அரசர் கோயில்	103
16.	ஆனூர்	111
17.	நெடுகுன்றம்	142
18.	காவாந்தண்டலம்	147
19.	தொடூர்	164
20.	பிச்சிவாக்கம்	167
21.	சோமங்கலம்	177

முனைவர் சீ. வசந்தி எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.
ஆணையர் (பொறுப்பு)

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை- 600 008.

நாள் : 15.03.2013

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுகளைப் படியெடுக்கும் பணியினை முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகின்றது. தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில் 26 மாவட்டங்களில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணி நிறைவுற்றுள்ளது. இதர மாவட்டங்களில் படியெடுக்கும் பணி நடைப்பெற்று வருகிறது. இத்துறை கல்வெட்டுப் பிரிவு வாயிலாக 6113 கல்வெட்டுகள் 42 தொகுதிகளாக இதுவரை வெளிவந்துள்ளன. இந்நூல் 'தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-IV', தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் 42ஆக வெளிவருகிறது.

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை 85 வரலாற்றுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்து வருகின்றது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்துறையின் கீழ் 11 வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. அவற்றில் சிவன்கூடல், விட்டலாபுரம் ஆகிய வரலாற்றுச் சின்னங்களில் உள்ள கல்வெட்டுகள் 'காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-I' என்னும் நூலில் வெளிவந்துள்ளன. ஏனைய 9 வரலாற்றுச் சின்னங்களில் உள்ள கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அவைமுறையே சிவபுரம், இடையார்பாக்கம், கூரம், காஞ்சிபுரம் சொக்கீசுவரர் கோயில், திருப்பருத்திக்குன்றம் திரைலோக்கியநாதர் மற்றும் சந்திரபிரபா கோயில், தாங்கி, கருங்குழி, ஆலம்பரை ஆகியனவாகும். இது தவிர மாவட்டத்தின் பிற ஊர்க் கல்வெட்டுகளும் இத்தொகுதியில் வெளிவருகின்றன.

இக்கல்வெட்டுகளைப் படித்துப் பதிப்பித்து நூலாக வெளிக்கொணர்ந்துள்ள இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

இந்நூலினை D.T.P. செய்து அட்டைப்படம் வடிவமைத்த இத்துறை அச்சுப்பிரிவு பணியாளர்கள் திருமதி தே. சத்தியவதி, திரு. மு. சக்திவேல் ஆகியோருக்கும் எனது பாராட்டுகள்.

2012-2013-ஆம் நிதியாண்டு பகுதி திட்டத்தின் கீழ் இந்நூலினை வெளியிட அனுமதியளித்து, நிதியுதவி வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

துறை அலுவலர்களின் உழைப்பாலும் பெரு முயற்சியாலும் இது போன்ற நூல்களை வெளியிடுவதில் இத்துறை மகிழ்ச்சியடைகிறது. வரலாற்றுச் செய்திகளை எழுதிட உதவும் முதன்மைத் தரவுகளில் ஒன்றான இக்கல்வெட்டுச் சான்றுகளைப் பயன்படுத்தி ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் தமிழகத்தின் பண்டைய வரலாற்றுச் சிறப்புகளை வெளிக்கொணர வேண்டும் என்பதே என் ஆவல். இச்சீரியப் பணியில் ஈடுபட்டு வரும் எம்துறையைச் சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னுரை

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதை முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்துறையின் கீழ் 11 வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 11 வரலாற்றுச் சின்னங்களில் சிவன்கூடல், விட்டலாபுரம் ஆகிய கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் 'காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்-தொகுதி-I' என்ற நூலில்வெளியிடப்பட்டுள்ளன. இதர 9 வரலாற்றுச் சின்னங்களான சிவபுரம், இடையார்பாக்கம், கூரம், திருப்பருத்திக்குன்றம்-திரைலோக்கியநாதர் மற்றும் சந்திரபிரபா கோயில், காஞ்சி-சொக்கீசுவரர், தாங்கி, கருங்குழி, ஆலம்பரை ஆகியவற்றில் உள்ள கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

சிவபுரம்

முதலாம் இராஜராஜன் காலத்தில் இக்கோயில் முழுக் கற்றளியாகக் கட்டப்பட்டுள்ளது. இம்மன்னனின் பெயரில் 'ராஜராஜ ஈஸ்வரமுடையார்' என்று இப்கோயில் அழைக்கப்பட்டுள்ளதை அவனது 24-ஆம் ஆண்டு (கி.பி. 1000) கல்வெட்டால் அறிகிறோம். அன்று இவ்வூர் 'உரோகடம்' என்றழைக்கப்பட்டது. முதலாம் இராஜேந்திரனின் 12-ஆம் ஆட்சியாண்டு வரை இவ்வூர் 'உரோடகம்' என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டுள்ளது. இம்மன்னனின் 13-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வூரினை இக்கோயிலுக்கு தேவதானமாக அளித்து 'சிவபுரம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அது தொடர்ந்து, இவனின் 21-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'புரிசை நாட்டு சிவபுரத்து ராஜராஜஸ்வரமுடையார்' என்று குறிப்பிடுவதிலிருந்து இவ்வூருக்கு சிவபுரம்' என்ற பெயர் நிலைபெற்றுள்ளது எனலாம்.

முதலாம் இராஜேந்திரன் தனது 8-ஆவது ஆட்சியாண்டில், இக்கோயிலில் இரண்டு நந்தா விளக்கெரிக்க இம்மன்னனே 180 ஆடுகள் கொடையாக அளித்துள்ளான் மேலும் இவனது 9-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1021) ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலுக்கு அரசன் இராஜேந்திர சோழனே ஆபரணங்கள் செய்தளித்த தகவல் கூறப்பட்டுள்ளது. அணிகலன்களின் பெயர்களும் அவற்றின் எடையும் கூறப்பட்டதுடன், அணிகலன்களில் பதிக்கப்பட்ட மாணிக்கம், வயிரம், பச்சை, இளஞ்சிவப்புக்கற்கள், சிறிய மாணிக்கம் ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆபரணங்களுடன் வெண்சாமரை, 80 பொற்பூக்கள் போன்றனவும், இக்கோயில் ஆடவல்லார் அபிமாந மேரு விடங்க தேவருக்கு திருவபிஷேகம் செய்த பொன்னும் பொன்னாலான திருமாலை, தோடு, வாகு வலையம், திருக்கையக்காறை நான்கு, திருக்காற்காறை இரண்டு, பாதசாயல் இரண்டு ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட்ட பொன்னின் அளவுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல அத்தேவர்

தேவியார்க்கும் திருமாலை, வாகு வலையம், பட்டிகை ஆகியனவும் அணிகலன்கள் கொடுக்கப்பட்ட விவரம் கூறப்பட்டுள்ளது. இஷபவாகன தேவருக்கும், அவர் தேவியார்க்கும் ஆபரணங்கள் மன்னன் பெயரிலேயே செய்தளிக்கப்பட்டிருக்கின்றன.

(1) ஸ்ரீராஜேந்திர சோழன் இட்ட பொற்பூ
(2) ஸ்ரீராஜேந்திர சோழன் பொன்னின் தளிகை
(3) ஸ்ரீராஜேந்திர சோழன் மண்டை
(4) ஸ்ரீராஜேந்திர சோழன் பட்டம்
(5) ஸ்ரீராஜேந்திர சோழன் வெண்சாமரை

மேலும் இக்கோயிலில் சிறப்பான வழிபாடுகள் நடந்துள்ளதை இங்குள்ள கல்வெட்டுகள் பகிர்கின்றன.

இடையார்பாக்கம்

இவ்வூர்க் கோயிலில் நான்கு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டு களில் காலத்தால் பழமையானது முதலாம் குலோத்துங்கனின் 13-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1083) கல்வெட்டாகும். இம்மன்னனின் 37-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1107), மன்னனின் ஆணைக்கிணங்க இத்திருக்கற்றளி சந்திரசேகரன் இரவி என்கிற சோளேந்திரசிங்க ஆசாரியன் என்பவனால் எடுப்பிக்கபட்டுள்ளச் சிறப்புச் செய்தியினை அளிக்கிறது. எனவே, முதலாம் குலோத்துங்கனின் 13-ஆம் ஆட்சியாண்டிற்கு முன்னர் எடுப்பிக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்யலாம். அதாவது கி.பி. 1070-1083-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலம்.

இவ்வூர், அன்று 'புரிசை' என்கிற ஊரின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. இரண்டாம் குலோத்துங்கனின் காலத்தில் (கி.பி. 1145) இவ்வூர் இடையாற்றுப்பாக்கமான ராஜவிச்சாதிர சதுர்வேதிமங்கலம் என்றழைக்கப்பட்டுள்ளது. ஆகவே புரிசை என்ற ஊரிலிருந்து பிரித்து 'இடையாற்றுப்பாக்கம்' என்ற பெயர் வழங்கப்பெற்றுள்ளதை அறியமுடிகிறது. தற்போது இவ்வூர் 'இடையார்பாக்கம்' என்று மருவியுள்ளது.

அருளாள பட்டன் மகள் ஆண்டமைச் சானி என்கிற பிராமணப் பெண் இக்கோயில் இறைவன் 'திருப்படக்காடுடைய மகாதேவருக்கு' நந்தாவிளக்கெரிக்க புரிசை ஊரார் வசம் நிலம் ஒன்றினை இரண்டாம் குலோத்துங்கனது 12-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1145) அளித்துள்ளாள். இவ்விளக்கு நீண்ட நாட்களாக எரியாமல் இருந்துள்ளதை அறிந்த பின்னர், இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் (கி.பி. 1174) இந்நிலத்தினை ஊராரே வைத்துக் கொண்டு விளக்கெரிக்க மாற்றாக பசுக்கள் வழங்கிட வழிவகைச் செய்யப்பட்டுள்ளது.

இடையார்பாக்கம்

கூரத்தில் இரண்டுக் கோயில்கள் உள்ளன. ஒன்று சிவன் கோயில், மற்றொன்று பெருமாள் கோயில். இக்கோயில்கள் இரண்டும் பல்லவர் காலத்தியவை. பெருமாள் கோயிலில் தந்திவர்மனின் காலத்தியக் (கி.பி. 808) கல்வெட்டும், சிவன் கோயிலில் நந்திவர்மன் கல்வெட்டும் (கி.பி. 866) காலத்தால் முந்தையக் கல்வெட்டுகளாக

காணப்படுகின்றன. இச்சிவன் கோயில் தூங்காணை மாட வடிவில் கட்டப்பட்டுள்ளது. தமிழகத்தில் காணப்படுகின்ற தூங்கானை வடிவ கட்டடக் கோயில்களில், இக்கோயிலே மிகப்பழமையானது. இக்கோயில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்டச் சின்னமாக உள்ளதென்பதும் சிறப்பாகும்.

இவ்வூர்க் கோயில்களில் பல்லவ மன்னர்களான தந்திவர்மன், நந்திவர்மன், நிருபதுங்கவர்மன் ஆகியோரது கல்வெட்டுகளும், சோழ மன்னர்களான முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன், முதலாம் இராஜராஜன் போன்றோரின் கல்வெட்டுகளும் இராட்டிரகூட மன்னன் கன்னர தேவன் எனும் மூன்றாம் கிருஷ்ணனின் கல்வெட்டு ஒன்றும் இடம்பெற்றுள்ளன.

பல்லவர் காலத்தில் கூரம் என்றழைக்கப்பட்ட இவ்வூர் சோழ மன்னர்களில் முதலாம் இராஜராஜன் காலத்தில் 'கூரம் என்கிற இராஜவிச்சாதிர சதுர்வேதிமங்கலம்' என்று பெயர் மாற்றமடைந்துள்ளது. இவ்வூர் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப் பட்டுள்ளதை அறிகிறோம். சிவன் கோயில், பல்லவர் காலத்தில் பெருந்திருக்கோயில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கோயில்களில் பூசை செய்வதற்காக நிலம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலம் அர்ச்சனா போகம் என்ற பெயரால் சுட்டப்பட்டுள்ளது. அதேபோன்று கோயிலில் இறைவனுக்கு அமுதுபடி, பிராமணர்களுக்கு உணவளிக்கவும் வழிவகைச் செய்யப்பட்டுள்ளதை இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. மேலும் இவ்வூரில் சுப்ரமணியர் கோயில் ஒன்றிருந்ததையும் இவ்விறைவனுக்கு மூன்று சந்ததியின் போதும் அமுதுபடைக்க இவ்வூர் சபையார் ஏற்பாடு செய்துள்ளனர்.

காஞ்சிபுரம் - சொக்கீசுவரர் கோயில்

சொக்கீஸ்வரர் கோயில் என்றழைக்கப்படும் இக்கோயில் முற்காலச் சோழர்களில் உத்தமச் சோழன் காலத்தில் எடுப்பிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக ஒரே ஒரு கல்வெட்டு அதுவும் உத்தமசோழனின் கல்வெட்டு மட்டுமே இங்கு காணக் கிடைக்கின்றது. அக்காலத்தில் இக்கோயில் 'தெற்க்கிருந்த நக்கர்' எனும் பெயரால் வழங்கப்பெற்றுள்ளது. இக்கோயிலில் உள்ள பிள்ளையார், அன்று 'கரிகால சோழப் பிள்ளையார்' என அழைக்கப்பட்டுள்ளார். இப்பிள்ளையாருக்கு 'சந்திவிளக்கு' வைக்கப்பட்டச் செய்தியினை இக்கல்வெட்டு உணர்த்துகின்றது.

திருப்பருத்திக்குன்றம்

காஞ்சிபுரம் சிவகாஞ்சி, விஷ்ணுக் காஞ்சி, ஜின காஞ்சி என்று மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. ஜின காஞ்சிப் பகுதியில் அமைந்துள்ள திருப்பருத்திக் குன்றத்தில் திரைலோக்கியநாதர் கோயில், சந்திரபிரபா கோயில் ஆகிய இரு கோயில்கள் அடுத்தடுத்து உள்ளன. இக்கோயில்களை தமிழ்நாடு தொல்லியல் துறை பராமரித்து வருகின்றது. திருப்பருத்திக்குன்றத்து சமணக் கோயில் பல்லவர் காலத்திலே எடுக்கப்பட்டுள்ளது என்பதை பள்ளன் கோயில் செப்பேடு கூறுகிறது. சந்திரபிரபா கோயில் பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட மணற்கல்லினாலும், அதே கட்டட அமைதியையும் கொண்டு விளங்குகின்றது. ஆனால் பல்லவர் காலத்தில் எழுப்பப்பட்ட திரைலோக்ய நாதர் கோயில் பிற்காலச் சோழர்களில் முதலாமாவான் ஆன முதலாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் தற்போதைய கற்றளி அமைப்பில் முழுவதும் புதிதாக எடுப்பிக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் பள்ளன் கோயில் என்ற ஊரில் செப்பேடு ஒன்று கண்டெடுக்கப்பட்டதால் இது 'பள்ளன் கோயில் செப்பேடு' என்று அழைக்கப்படுகிறது.

இச்செப்பேடு முற்காலப் பல்லவ மன்னன் சிம்மவர்மனின் 6-வது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது. அதாவது கி.பி. 546-ஆம் ஆண்டைச் சார்ந்தது. இச்செப்பேடு, திருப்பருத்திக்குன்றத்தில் இருந்த நந்தி சங்கத்தைச் சார்ந்த வஜ்ஜிர நந்தி எனும் சமண முனிவருக்கு ஊர் ஒன்றினை பள்ளிச்சந்தமாக வழங்கியதைக் கூறுகிறது. எனவே இக்கோயிலில் கி.பி 6-ஆம் நூற்றாண்டிலிருந்து வழிபாட்டில் இருந்து வருகிறது என்பதை அறிகிறோம். திருப்பருத்திக்குன்றம் தொடர்பான செப்பேடு என்பதால் இந்நூலில் அச்செப்பேடு வெளியிடப்பட்டுள்ளது.

திரைலோக்கியநாதர் கோயில் முழுவதும் கற்றளியாக அமைக்கப்பட்டது முதலாம் குலோத்துங்கன் காலத்தில்தான். மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் திருச்சுற்று மண்டபம் சீர்செய்யப்பட்ட விவரத்தினை அவனது 22-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1200) கல்வெட்டு கூறுகிறது. இவனது ஆட்சியிலும் இவனது மகன் மூன்றாம் இராஜராஜனின் ஆட்சியிலும் குறுநில மன்னனாக இருந்த காடவ மன்னன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனால் இக்கோயில் திருமதில் எடுக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் இராஜராஜனின் ஆட்சியின்போது தியாகசமுத்திரபட்டையார் என்பவர் காண்ணிப்பாக்கம் என்ற ஊரினை இக்கோயிலுக்கு பள்ளிச்சந்தமாக அளித்துள்ளார்.

விஜயநகர மன்னர் இரண்டாம் புக்கரின் அமைச்சர் இருகப்பா என்பவர் இக்கோயில் கருவறை முன் உள்ள சங்கீத மண்டபத்தை எடுப்பித்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. மேலும் கி.பி. 1362-இல் மன்னன் இரண்டாம் புக்கரின் நலன் வேண்டி மாமண்டூர் அருகே உள்ள மகேந்திரமங்கலம் என்ற ஊரினை இக்கோயிலுக்குப் பள்ளிச்சந்தமாக வழங்கியுள்ளார்.

தாங்கி

நெடுந்தூரம் பயணம் செய்பவர்கள் ஆங்காங்கே சிறிது ஓய்வு எடுத்து பயணத்தைத் தொடர்வது அக்கால வழக்கம். அவ்வாறு ஓய்வு எடுப்பதற்காக நெடுஞ்சாலை ஓரங்களில் மண்டபங்கள், சத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை - காஞ்சிபுரம் சாலையில் இதுபோன்று சத்திரங்கள் பெயர் கொண்ட ஊர்களில் பல உள்ளன. எடுத்துக்காட்டாக பிள்ளைச் சத்திரம், சுங்குவார் சத்திரம் போன்றவை. அதுபோன்று காஞ்சிபுரம் - செங்கல்பட்டு நெடுஞ்சாலையில் தாங்கி என்னும் ஊரில் ஒரு வழிப்போக்கர் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் பிற்காலத்தைச் சார்ந்தது. அதாவது இம்மண்டபம் கி.பி. 1777-ஆம் ஆண்டு இவ்வூரைச் சேர்ந்த தீத்தர் செட்டி, மூத்தர் செட்டி ஆகியோரால் நிறுவப்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கருங்குழி

முகம்மதியர்களால் கட்டப்பட்ட இக்கோட்டையை, கி.பி. 1781-ஆம் ஆண்டு கேப்டன் தேவிஸ் என்பவன் தலைமையிலான ஆங்கிலேயர் படை கைப்பற்றியது இச் செய்தியை கல்வெட்டாக வெட்டியுள்ளனர்.

ஆலம்பரை

மொகலாயர் கட்ட அமைதியில் உள்ள கோட்டை ஒன்று ஆலம்பரை என்னும் இவ்வூரில் உள்ளது. இக்கோட்டை பிரெஞ்ச் ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. பிரெஞ்ச்-ஆங்கிலேயர் இடையேயான போரில் இக்கோட்டை ஆங்கிலேயர்களால் சிதைக்கப்பட்டது.

இக்கோட்டை அருகே உள்ள கல்லறைப் பகுதியில் ஒரு துண்டு கல்வெட்டு காணப்படுகிறது. இது ஜயமலிஈஸ்வரமுடைய மகாதேவர் கோயில் திருநந்தவனத்தினை சீர்படுத்திய விவரத்தினைக் கூறுகிறது. இவ்வூர் அருகே வேம்பனூர் என்ற ஊரில் முத்தாலம்மன் கோயில் முன்மண்டபம் அடிப்பகுதியில் இரு துண்டுக்கல்வெட்டுகள் காணப்படுகின்றன் அதில் ஒன்று ஜயமலிஸ்வரர் கோயில் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. எனவே இக்கோயில் ஜயமலிஸ்வரமுடையார் கோயிலாக கருத வாய்ப்புள்ளது.

மேலும் இங்குள்ள கல்வெட்டில் 'இடைக்கழிநாடு' என்று குறிப்பும் காணப் படுகிறது. இக்கல்வெட்டு முழுமையாக இல்லை. தற்போது 'கடப்பாக்கம்' என்று அழைக்கப்படும் ஊர் இடைக்கழி நாடு என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. சங்க காலப் புலவர்களில் ஒருவரான இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் இப்பகுதியைச் சார்ந்தவர். எனவே இடைக்கழி நாடு சங்க காலம் முதல் இன்று வரை அப்பெயரிலே வழங்கி வருகின்றது எனக் கூறலாம். சோழர் காலத்திலும் இப்பகுதி இடைக்கழி நாடு என்ற பெயரிலே அழைக்கப் பட்டதை வேம்பனூர் கல்வெட்டில் 'இடைக்கழி நாடு' என்ற குறிப்பு வாயிலாக அறிகிறோம். இவ்வூரிலிருந்த ஜயமலீஸ்வரர் கோயிலுக்கு விளக்கு ஒன்று வைப்பதற்கு 90 ஆடுகள் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 3¾ வேலி நிலம் இக்கோயிலுக்குத் தேவதானமாகக் கொடுக்கப்பட்டுள்ளச் செய்தியும் தெரியவருகிறது.

ஓணம்பாக்கம்

மேல்மருவத்தூரிலிருந்து செய்யூர் செல்லும் சாலையில் 9 கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரில் ஊசிமலை, கருப்புக்குன்று ஆகிய இரு சிறுமலைகள் உள்ளன. ஊசி மலையினை குரவன் குன்று, பஞ்சபாண்வடர் மலை என்றும் அழைக்கின்றனர். இம்மலையில் சமணர்ப் படுக்கைகள் காணப்படுகின்றன. கருப்புக் குன்று என்றழைக்கப்படும் மலையில் சமணத் தீர்த்தங்கரர் சிற்பங்கள், பார்சுவதநாதருக்கென்று குடைவிக்கப்பட்ட சிறு கோயில், சமணர்படுக்கைகள் உள்ளன. இம்மலைக்கு மேல் பகுதிக்கு செல்லும் பாதையில் 4 அடி உயரமுள்ள சிறுகுன்றினை குடைந்து அதில் பார்சுவநாதர் சிற்பம் பாங்குற செதுக்கப்பட்டுள்ளது. இச்சிறு கோயில் குன்றின் முகப்பில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கிரந்த எழுத்துக்களால் பொறிக்கப்பட்டக் கல்வெட்டு ஒன்று தென்படுகிறது. சமண சமயத்தில் சமயம், சமுதாயத்தினை நிர்வகிக்கும் குழுவிற்கு 'இருபத்து நான்கு' என்ற பெயரில் அமைப்பு உள்ளது. இதனை நிறுவிய 'வசுதேவசித்தாந்த படாரர்' என்ற சமணமுனியால் இச்சிறுகோயில் நிறுவப்பட்டது.

அரசர்கோயில்

திருவரசுரம் பெருமாள் கோயில் இறைவன் ஸ்ரீசேனாபதி ஆழ்வார் எனக் குறிப்பிடப்படுகிறார். இக்கோயில் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுகள்

இரண்டு உள்ளன. இக்கோயில் ஆழ்வார் வழிபாட்டிற்கு தானங்கள் அளிக்கப்பட்டுள்ளன. பாத்தூர் சபை நிர்வாகத்தின் உறுப்பினராக இருந்த காஞ்சி சொக்கத் தேவரான கூத்தவர்மன் பட்டன் என்பவன், இம்மன்னனின் 14-ஆம் ஆட்சியாண்டு வரை அவனுக்குரிய நிலத்தினை உழுது அனுபவித்து வந்த வேளையிலே அதற்குரிய வரிகளை செலுத்தாமல் ஊரைவிட்டு சென்று விட்டான். இந்நிலத்தினை அன்றாடு நற்காசு வாசிபடர் வராகன் 27 பணம் கொண்டு ஸ்ரீசேனாபதி பெருவிலையாக பொது ஏலத்தில் வாங்கி திருவரசுரர் நாயனர் கோயிலில் உள்ள ஸ்ரீசேனாபதி ஆழ்வார்க்கு கொடையாக அளிக்கப்பட்டுள்ளது.

ஆனூர்

ஆனூர் எனும் இவ்வூரினை கல்வெட்டுகள் ஆனியூர், ஆனியூரான சத்யதசிரய குலகாலச் சதுர்வேதிமங்கலம், ஆதியூரான சத்யாசிரயகுலகாலசதுர்வேதிமங்கலம் என்று சுட்டுகின்றன. இவ்வூரில் சுப்ரமணியர், தேவேந்திரன், பிடாரி போன்றோருக்கும் கோயில்கள் இருந்துள்ளன. மீமாம்சை, சாத்திரங்கள் ஆகியவை விவரித்துக் கூறப்பட்டுள்ளன. அரசும் காலமும் கூறப்படாத கல்வெட்டு ஒன்று சித்திரமொழிப் பெரிய நாட்டார் செய்த தர்மத்தைக் குறிக்கிறது. சித்திரமேழிப் பெரியநாட்டார் இக்கோயிலைக் கல்லால் கட்டியவர்களாக இருக்க வேண்டும். இன்று வேதநாராயணர் என்றழைக்கப்படும் கோயிலின் பழம்பெயர் 'நடுவில் திருமுற்றம் சித்திரமேழி விண்ணகர்' என்பதும் ஆநியூர் சத்ரிய குலகாலச் சதுர்வேதிமங்கலம் எனப் பெயர் சூட்டப்பட்டு பிராமண ஆட்சியூராக இருந்துள்ளதும் தெரியவருகிறது. சித்திரமேழிப் பெரிய நாட்டாரின் சின்னங்களான கலப்பை, மேழி, தமரு, சக்கரம், செண்டு ஆகியவை கல்வெட்டின் தலைப்பில் செதுக்கப்பட்டுள்ளன. பிற்காலத் திருப்பணியில் இக்கல்வெட்டு இடம் மாறி வெறும் கல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்று இக்கோயிலிலுள்ள முழுமையான கல்வெட்டு இது ஒன்று மட்டுமே.

காவாந்தண்டலம்

கல்வெட்டுகளில் இவ்வூர் காவான்தண்டலம், காய்வான்தண்டலம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூரில் சோழீஸ்வரர் எனும் சிவன் கோயில் ஒன்றும், இலட்சுமிநாராயணசாமி கோயில் ஒன்றும் உள்ளன. சோழீஸ்வரர் கோயிலில் நான்கு கல்வெட்டுகள் உள்ளன. அவை,விக்கிரமச் சோழனின் மூன்று கல்வெட்டுகளும், மூன்றாம் குலோத்துங்கனின் ஒரு கல்வெட்டும் ஆகும். எனவே இக்கோயில் விக்கிரம சோழன் காலத்தில் எடுக்கப்பட்டதாக இருக்கலாம் என்றால் இல்லை. இவ்வூர் பெருமாள் கோயிலில் உள்ள முதலாம் இராசேந்திரனின் 4-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1016) கல்வெட்டு ஒன்று. ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து தமனூர் நாட்டு காய்வாந்தண்டலம் ஆன சதுர்வேதிமங்கலத்தில், இந்நாடு வகை செய்கிற அதிகாரி வைகூருடையான் வல்லாள கண்டன் பிச்சன் என்பவன் மன்னன் முதலாம் இராஜேந்திரனின் பெயரில் 'ராஜேந்திர சோழ ஈஸ்வரமுடைய மகாதேவர்' கோயிலை எழுப்பியுள்ளான்என்ற செய்தியைச் கூறுகிறது. சோழீஸ்வரர் கோயில் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் கட்டப்பட்டது என்றாலும், அக்கோயிலில் இம்மன்னனது கல்வெட்டு ஏதுமில்லை. அக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால்

முற்பட்டது விக்கிரமசோழனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இக்கோயில் இறைவன் வழிபாட்டுச் செலவினங்களுக்கு இறையிலியாக நிலம், சபையாரால் அளிக்கப் பட்டுள்ளது. இக்கோயில் தற்போது சோழீஸ்வரர் கோயில் என்றழைக்கப்படுகிறது.

இலட்சுமி நாராயாணசாமி பெருமாள் கோயிலில் காணப்படும் பல்லவ மன்னன் கம்பவர்மனின் 14-வது ஆட்சியாண்டு (கி.பி. 896)) கல்வெட்டில் வேங்கை நாட்டு குளனூர் என்னும் ஊரைச் சார்ந்த மானசர்வ்வன் என்பவன் இவ்வூர் விஷ்ணுக் கோயிலை எடுப்பித்தச் செய்தியை தருகிறது. மேலும் இம்மன்னனின் 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.900) இக்கோயில் இவனது பெயரிலேயே 'மானசர்வ்வ விஷ்ணுகிருகம்' என்றழைக்கப்பட்டதை அறிகிறோம். முதலாம் இராசேந்திரன் கல்வெட்டும் இச்செய்தியினை உறுதிப்படுத்துகிறது.

பிச்சிவாக்கம்

இவ்வூர் பட்டமுடீஸ்வரர் கோயிலில் பார்த்திவேந்திரவர்மன் காலக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இவை தரைப்பகுதியில் பதிக்கப்பட்டுள்ளன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இச்சிவன் கோயில் எழுப்பப்பட்டது. கி.பி. 1914-ஆம் ஆண்டு இவ்வூர் வேளாள குலத்தைச் சார்ந்த திருவேங்கட முதலியார் என்பவரால் தற்போதைய கோயில் முழுவதும் கருங்கற்களால் புதிதாக எடுக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் முன்னோர்களால் செங்கற்களால் கட்டப்பட்டக் இக்கோயிலை கருங்கல்லால் எழுப்பியச் செய்தி கிடைக்கிறது. அன்றைய மாவட்ட ஆட்சியர் ரைஸ் துரை, தாசில்தார் நரசிம்ம அய்யர் ஆகியோரின் முயற்சியினால் எடுக்கப்பட்டதையும் கூறுகிறது. எனவே கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்த கோயில் மிகவும் சிதிலமடைந்து கிடைந்ததால் செங்கல் கொண்டு அவரது முன்னோர்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

சோமங்கலம்

மூன்றாம் குலோத்துங்கனுடைய14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு(கி.பி. 1192) இவ்வூரில் ஏரி பலமுறை உடைந்ததையும் அதனைச் சரி செய்ததையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. குன்றத்துர் நாட்டுச் சோமங்கலமான பஞ்சநதிவாண சதுர்வேதிமங்கலத்து ஏரி குலோத்துங்க சோழனின் 12 ஆவது ஆட்சியாண்டில் பெருமழை பெய்து வெள்ளம் ஏற்பட்டு ஒரேநாளில் ஏழிடத்தில் பெருமடை உடைப்பு ஏற்பட்ட போது, திருச்சுரகண்ணப்பந் திருவேகம்பமுடையான் காமன் கண்டவானவன் சரி செய்தான். மன்னனுடைய 13 - ஆவது ஆட்சியாண்டில் இரண்டிடங்களில் உடைப்பு ஏற்பட்டபோதும் இவனே சரி செய்தான். மன்னனின் 14 - ஆம் ஆட்சியாண்டில் இவனிடமிருந்து 40 பழங்காசுகள் மகாசபையினர் பெற்று மடைகளையும், கரையினை சீர் செய்துள்ளனர். இதனின் வட்டி கொண்டு பன்னிருபிடிபரப்பு கொண்ட 40 குழி நிலத்துக் கரையினை ஆண்டுதோறும் கல்லிக்கரை செய்யவும் சம்மதித்துள்ளனர்.

குன்றத்துர் நாட்டு சோமங்கலம் என்கிற இராசசிகாமணிச் சதுர்வேதிமங்கலத்திலுள்ள உடையார் சோமீஸ்வர முடைய நாயனார் திருமடைவிளாகத்திலும் இவ்வூர் பெருமாள் கோயிலான திருநிலை அழகிய பெருமாள் திருவிடையாட்டத்திலும் உள்ள மனைகளில் குடியேறும் கைக்கோளர்களுக்கு இடங்கைவரிகள் சர்வ மானியமாக கொடையளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையை நாட்டு கைக்கோள முதலியார்களும், யாதவராயர் சோழ கோனாரும் கல்லில் வெட்டுவித்தனர்.

இது ஸ்ரீவீரப்பிரதாப தேவராய உடையார் ஆட்சிக்காலத்தில் திருமடை வளாகத்தில் கைக்கோளர், குடியேறாது பாழ்பட்டுவிட்ட காரணத்தினால் அவர்கள் குடியேற சலுகை வழங்கப்பட்டது. சீபண்டாரத்திலிருந்து பட்டடை நூலாயத்திற்கு முதல் பெற்றுக் கொண்டு இவர்களே விளக்கும் பூசைத் திருப்பணியும் செய்ய வேண்டும் என்றும்; கைக்கோளருடன் மற்ற பிரிவினர் குடியேறவும், செக்கு இட்டுக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

சோமீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்கு திருநொந்தா விளக்குக்கும் பூசைத் திருப்பணிக்கும் அதிகாரிக்கு திருப்பரிவட்டம் போன்றவற்றிற்காகவும் அரசர் பிரதாப தேவமகாராயரே தானம் அளித்தச் செய்திக் கூறப்பட்டுள்ளது.

தமிழக அரசியல் வரலாற்று சமூகம் பொருளாதாரம் போன்ற ஆய்விற்குத் தேவையான அரியத் தகவல்களைக் கொண்ட இந்நூல், தமிழக வரலாற்றினை ஆய்வு செய்யும் ஆய்வாளர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் சிறப்புற வெளியிடுவதற்கு முழு ஒத்துழைப்பினை நல்கிய இத்துறை ஆணையர் பொறுப்பு முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கு எனது நன்றி.

இரா. சிவானந்தம்

கல்வெட்டாய்வாளர்

க.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 501/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	24
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1009
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	288/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	முதலாம் இராஜராஜன்			

இடம் : சிவன் கோயில் நுழைவாயிலின் தென்புறம்

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசைநாட்டு உரோடகத்து ஊரார்கள், இவ்வூர் ராஜராஜ ஈஸ்வரமுடைய மஹாதேவற்க்கு இறையிலி தேவதானமாக முன்னர் கொடையளித்த நிலம் நீக்கி மற்றோர் நிலத்தை இறையிலி தேவதானமாக விற்றுக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. முன்னர் கொடையளித்த நிலத்தின் எல்லைகளும் அப்போது விற்ற நிலத்திற்கு எல்லைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்த சாசனத்தை ஊரார் சொல்ல எழுதியவர் வைகானஸன் கேசவ சங்கர நாராயணன் ஆவார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியு னைக்கே உரிமை பூண்டமை மன
2. க்கொளக் காஞ்ஞூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கையய் நாடும் கங்கபாடியுங் நுளம்பபாடியும் தடிகை
3. ய்பாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டமும் இலட்ட
4. பாடி ஏழரை இலக்கமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளர் ஊழியுள் எல்லா யா
5. ண்டு னொழுதகையய் விளங்கும் யாண்டேய் செழியரைத்தேசு கொ[ள்] ஸ்ரீகோவி ராஜராஜகெஸரிவர்மாந
6. ஸ்ரீராஜராஜ தேவற்க்கு யாண்டு உசை ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து [மண]விற் கோட்டத்து

7. ப் புரிசை நாட்டு உரோடகத்து ஊரோம் நிலவிலையாவணக் கையெழுத்து எம்மூர் ஸ்ரீ ராஜ

8. ராஜ·ம·ஸ்ரீ முடைய உ(ா)ஹா தேவற்க்கு முன்பு நாங்கள் இறைஇலி தேவதானமாக உதகவொவுஞ் செய்து குடு

9. த்த நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை ம[ரு]த்துவ கிழவன் தேவானை திருவடி சேரிய்க்கு மேற்கும் தென்பாற்கெல்லை

10. . . விலி ஏத்ததுக்கு வடக்கும் இன்நும் தென்பாற்கெல்லை சூளை ஏத்தத்துப் பள்ளக்கழுவலுக்கு வடக்கும்

11. இன்னுங் கீழ்பாற்கெல்லை சூளை ஏத்தத்துப் பள்ளக் கழுவலுக்கு மேற்கும் இன்னும்

12. தென்பாற் கெல்லை சூளை ஏத்ததுக்குக் கழுவலுக்கு வடக்கும் மேல் பாற்கெல்லை [ம]ள்ளை ஏத்ததுக்கு கிழக்கும் இன்

13. னும் தென்பாற்கெல்லை மள்ளை [ஏ*]த்ததுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை முடக்கொற்றன் கொல்லைக்கும் கண்ண

14. [மு]தைய கிழவன் கொல்லைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை ஆற்றங் கரையய்க்குத் தெற்க்கும் இன்னான் கெல்லை உள்அகப்பட்ட நிலம் உண்

15. ணிலம் ஒழிவின்றிக் கீணோக்கிய கிணறும் மேநோக்கிய மரமும் மற்றும் எப்பேற்பட்டதும் முன்பு நாங்கள் ஸ்ரீ ராஜராஜ

16. ·ம·ஸ்ரீ முடைய உஹாதேவற்க்கு இறைஇலி தேவதானமாக உஉக வொவுஞ் செய்து குடுத்த நிலம் நீக்கி நாங்க

17. ள் இறைஇலி தேவதானமாக விற்கின்ற நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை சிற்றரையா மூதூர் நிலத்துக்கு மேற்க்கும் தெ

18. ன்பாற்கெல்லை சூளையான அளகன . . . ஏரிய்க்கும் உரோகடத்து ஊர் நின்றும் கூவத்துக்குப் போன

19. ப்பெருவழிக்கு வடக்கு மேல்பாற்கெல்லை சூளை ஏத்ததுக்கு கிழக்கு தென்பாற்கெல்லை கெகற்றதி ஏத்ததுக்கு [வ]டக்கும் இந்நுகெ[ன்*] பாற்கெல்

20. லை . . . பட்டிக்கு வடக்கும் மேல்பாற்கெ[ல்*]லை நீரோ[டு] காலுக்கு கடம்பங்கால்லுக்கு கிழக்கும் இன்னும் மேல்பாற்கெல்லை முடக் கொற்றன் குறி

21. ச்சி வெற்ப்பில் கீழையக்கரையக்கு மேற்க்கு ஒரு கோல் ஆற்றுக்கேய் வர கிழக்கு வடபாற்கெல்லை பாலாற்றில் நாங்க

22. ள் உடைய நிலத்துக்குத் தெற்கும் இன்னான்கெல்லை உள்ளகப்பட்ட நிலம் உண்ணில ஒழிவின்றிக் கீணோக்கிய

23. கிணறும் மேநோக்கிய மரமும் ஊர் இருக்கையும் ஏரியும் மேடும் பள்ளமும் மற்றும் உடும்போடிய் ஆமைய் ந

24. டஞ நிலம் எப்பேற்பட்டதும் உண்ணில மொழிவின்றி இறைஇலி தேவதானமாக விற்றுக்குடுத்தோம் இன்

25. னிலத்துக்கு . . . பெறுவதாகவும் சென்னா[ள]ம

26. ஞ்சி செய்யாததாகவும் அன்னீர் பாய்ச்சிய்க் கொள்ளப் பெறுவதாகவும் இந்நிலஞ் சுட்டி நீர்விலை கொள்ளப் பெறாத

27. தாகவும் எம்மூர் வரிசை ஆள(ா) நால்குடி மடவிளாகத்து இறுப்பதாகவும் இவர்களைச் சில்லிறை சோறு மாட்டு உள்பட மற்றுமெப்பே

28. பர்ப்பட்டதுங் காட்டப்பெறாததாகவும் இப்பரிசொட்டி இறைஇலி தேவ தானமாக ஒரு காலாவதும் இரு காலாவதும் முக்கா

29. லாவதும் விற்றுக்குடுத்தோம் உரோடகத்து ஊரோம் ஊரார் சொல்ல எழுதிநேன் இவ்வூர் வைய்கானலன் கேசவ

30. ன் சங்கர நாராயணநேன் இவை என் எழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை			**தொடர் எண் : 502/2013**		
மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	9
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1021
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	287/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தம் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	2
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்

குறிப்புரை : முதலாம் இராஜேந்திர சோழன் மெய்கீர்த்தியுடன் தொடங்குகிறது இக்கல்வெட்டு. ஸ்ரீராஜராஜஈஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலுக்கு அரசன் இராஜேந்திர சோழனே ஆபரணங்கள் செய்தளித்த தகவல் கூறப்பட்டுள்ளது. அணிகலன்களின் பெயர்களும் அவற்றின் எடையும் கூறப்பட்டதுடன், அணிகலன்களில் பதிக்கப்பட்ட மாணிக்கம், வயிரம், பச்சை, இளஞ்சிவப்புக்கற்கள், சிறிய மாணிக்கம் ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆபரணங்களுடன் வெண்சாமரை, 80 பொற்பூக்கள் போன்றனவும், இக்கோயில் ஆடவல்லார் அபிமாந மேரு விடங்க தேவருக்கு திருவபிஷேகம் செய்த பொன்னும் பொன்னாலான திருமாலை, தோடு, வாகு வலையம், திருக்கையக்காறை நான்கு, திருக்காற்காறை இரண்டு, பாதசாயல் இரண்டு ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட்ட பொன்னின் அளவுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல அத்தேவர் தேவியார்க்கும் திருமாலை, வாகு வலையம், பட்டிகை ஆகியனவும் அணிகலன்கள் கொடுக்கப்பட்ட விவரம் கூறப்பட்டுள்ளது. இஷபவாகன தேவருக்கும், அவர் தேவியார்க்கும் ஆபரணங்கள் மன்னன் பெயரிலேயே செய்தளிக்கப்பட்டிருக்கின்றன.

(1) ஸ்ரீராஜேந்திர சோழன் இட்ட பொற்பூ
(2) ஸ்ரீராஜேந்திர சோழன் பொன்னின் தளிகை
(3) ஸ்ரீராஜேந்திர சோழன் மண்டை
(4) ஸ்ரீராஜேந்திர சோழன் பட்டம்
(5) ஸ்ரீராஜேந்திர சோழன் வெண்சாமரை

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநில மடனையும் போற்சயப்பாவையுஞ் சீர்த்தணிச் செல்வியுனன் பெருதேவியராகி இன்புற நெடு

17. ட்டின மாணிக்கம் ஒன்று[ம்*] ஆக கல்லடங்க தன்மக் கட்டளைக் கல்லால் நிறை ஒன்பது மஞ்சாடியும் நாலு மாவும் மேற்படி தாலி ஒன்றினால் ஏறின மாணிக்

18. கம் ஒன்றும் வயிர[ம்*] மூன்றும் பச்சை ஒன்று நடுவு கட்டின சிறிய மாணிக்கம் ஒன்றும் ஆகக் கல்லடங்கத் தன்ம கட்டளைக் கல்லால் நிறை எட்டு மஞ்ச[ா]

19. டியு[ம்*] மூன்று மாவும் நாண் இரண்டிநாள் தன்மக் கட்டளைக் கல்லால் நிறை பொன் முக்கழஞ்சரையும் வட்டமணி இருபத்தொன்றினாற் தன்ம கட்டளைக் கல்லால் நிறை

20. [பெ]ான் கழஞ்சே காலும் திருச்செவிமலர் பன்னிரண்டினால் மேற்படி கல்லால் நிறை பொன் முக்கழஞ்சு ஸ்ரீ ராஜேந்ர சோழன் வெண்சாமரை ஒ

21. ன்றினால் அலகு நிலைப்படி குடிஞைக் கல்லால் நிறை பொன் இருபத்து நாற் கழஞ்சே மஞ்சாடியும் ஸ்ரீ ராஜேந்ர சோழன் வெண்சாமரை ஒன்றினா

22. ல் அலகு நிலைப்படி குடிஞைக் கல்லால் நிறை பொன் இருபத்து முக்கழஞ்சேய் மஞ்சாடியும் திருப்பொற்கை ஈச்சொப்பி அலகு நிலைப்படி குடி

23. ஞைக் கல்லால் நிறைபொன் இருபத்தொன்பதின் கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடியும் இலையிற்றிற் கொட்டைத் தலைக்கிட்ட பொன் வரயோலைப்

24. படி அரைக்கழஞ்சே யிரண்டு மஞ்சாடியும் பொற்பூ ஒன்றினால் தன்ம கட்டளைக் கல்லால் நிறை பொன் இரு கழஞ்சாகப் பொற்பூ எண்பதி

25. னாற் . . . . . ற்றுபதின் கழஞ்சும் திருமாலை ஒன்றினாற் தன்ம கட்டளைக் கல்லால் நிறை பொன் எழு கழஞ்சேய் முக்கா

26. லே அரைக்காலும் ஆடவல்லார் சுஹிஶாநமேரு விடங்க தேவர்க்கு யாண்டு கூ ஆவது நாள் கூாக னால் சாத்தி அருளக்குடுத்த திருவஹிஷேகம் ஒன்றிற்கு [கு]

27. டிஞைக் கல்லால் நிறை பொன் நாற்பத்தொன்பதின் கழஞ்சேய் நாலு மஞ்சாடியு[ம்*] மும்மாவரையும் திருமாலை ஒன்றினாற் மேற்படி கல்லா

28. ல் நிறை பொன் முக்கழஞ்சேய் காலே ஒன்பது மாகாணியும் கம்பி ஒன்றினால் மேற்படி கல்லால் நிறைபொன் கழஞ்சேய் ஒன்பது மாகா

29. ணியும் திருக்காதிற் சாத்தி அருளும் தோடு ஒன்றினால் மேற்படி கல்லால் நிறை பொன் கழஞ்சேய் காலே மூன்று மாவும் வாஹு வலையம் இரண்

2. துயில் ஊழிஉள் இடைதுறை நாடுஞ்டர்வன வேலிப் படர் வனவாசியுஞ் சுள்ளிச் சூழ்மதிட் கொள்ளிப்பாக்கையும் நண்ணற் கருமு

3. ரண் மண்ணைக் கடக்கமும் பொருகடல் ஈழத்தரை[சர் தம்]முடியும் ஆங்க

4. வர் தேவியர் ஓங்கெழில் முடியு முன்னவர் பக்கற் தென்னவன் வைத்த சுஞ்முடியும் இஞ்ர் ஆரமுஞ்ண்டிரை ஈழமண்ட

5. டல முழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர் புகழ் முடியுஞ் செங்கதிர் மாலையும் சங்கதி

6. ர்வேலைத் தொல்பெருங்காவல் பல்பழஜீவுஞ் செருவிற் சினவி இருபத்தொருகால் அரைசுகளை கட்ட பரசிராமன் மேல் வரு

7. ஞ் சஜிமற்றீவரண் கருதி யிருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேஸரி புஜரான ஸ்ரீ ரா[ஜே]

8. ஜ்ர் சோழ ஜேவற்கு யாண்டு உ ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து மனைஇற் கோட்டத்துப் புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீ ராஜ

9. ராஜ ஈஸ்வரமுடைய ஜஹாஜேவற்கு உடையார் ஸ்ரீ ராஜேஜ்ர் சோழ ஜேவர்[க்கு*] யாண்டு கூ ஆவது நாள் . . . னாற் சாத்தி அருளக் குடுத்த திருப்பொ

10. ற் கொள்கை ஒன்றினால் குடிஞைக் கல்லால் நிறை பொன் இருநூற்றுக் கழஞ்சும் யாண்டு எ ஆவது நா(ரா)ள் யிரு னா[ல்] உடையார் ஸ்ரீ ராஜேஜ்ர் சே[ர]

11. ழ தேவர் இட்ட பொற்பூ ஒன்றினால் குடிஞைக் கல்லால் நிறை பொன் ஐய்ங்கழஞ்சும் ஊரார் . . பட்டம் மூன்றினாற் தன்ம கட்டளைக்கல்

12. லின் . . .பொன் முப்பதின் கழஞ்சும் ஸ்ரீ ராஜேஜ்ர் சோழன் பொன் நின்றளிகை ஒன்றினான் குடிஞைக் கல்லால் அலகு நிலைப்படி பொன்

13. இருநூற்று நாற்பத்தெண் கழஞ்சும் ஸ்ரீ ராஜேஜ்ர் சோழன் மண்டை ஒன்றினாற் குடிஞைக் கல்லால் அலகு நிலைப்படி பொன் நாற்பத்து முக்கழஞ்

14. சே முக்காலே அரைக்காலும் ஸ்ரீ ராஜேஜ்ர் சோழ [பட்டம்] ஒன்றினாற் குடிஞைக் கல்லால் அலகு நிலைப்படி பொன் பதினைய்ங் கழஞ்சே

15. அரைக்காலும் மாணிக்கத்தாலி ஒன்றினால் ஏறின மாணிக்கம் ஒன்றும் வயிர[ம்*]மூன்றும் பச்சை ஒன்றும் இளநிறஞ் சிவப்பொன்நுமாக கல்லடங்க

16. த்தனம் கட்டளைக் கல்லால் நிறை அரைக் கழஞ்சே மூன்று மஞ்சாடியும் மேற்படி தாலி ஒன்றிநால் ஏறின மாணிக்க[ம்]* ஒன்றும் வயிரம் ஆறும் நடுவு க

30. டினால் மேற்படி கல்லால் நிறை பொன் ஐய்ங்கழஞ்சரையே மஞ்சாடியும் நாலுமாவும் திருக்கையக்காறை நாலிநால் உரு எட்டினால் மேற்படி கல்லா

31. ல் நிறை பொன் இருபதின் கழஞ்சரையே மஞ்சாடியும் ஒன்பது மாவரையும் திருக்காற்க்காறை இரண்டினால் உரு நாலினால் மேற்படி கல்லால் நிறை

32. பொன் பதின் முக்கழஞ்சரையும் பாதசாயல் இரண்டினால் மேற்படி கல்லால் நிறைபொன் நாற்கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் எழுமாவும்

33. இத்தேவர் நம்பிராட்டியார் திருவஹிஷேகம் ஓ

34. ன்பதின் கழஞ்[ச] ஏழுமாகாணி அரைக்காணி

35. . . கழஞ்சே முக்காலே . . . . . கையு திருமாலை ஒன்றினால் மேற்படி கல்லால்

36. பொன் முக்கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் த . . அரைக்காணியும் திருவு நாலும் உரு இர

37. ண்டினால் மேற்படி கல்லால் நிறை பொன் கழஞ்சே ஆறு மஞ்சாடியும் மொரு மாவும் வா

38.[ஹ ்] வலையய் இரண்டினால் மேற்படி கல்லால் நிறை பொன் ஐய்ங்கழஞ்சே இரண்டு மஞ்சாடியுமாறு

39. மாவுஞ்சிருக்காறை இரண்டினால் உரு நாலினால் மேற்படி கல்லால் நிறை பொன் எண் கழஞ்சே காலே காணி அரைக்கா

40. ணியும் தி . . . . ப்பட்டிகை ஒன்றினால் மேல்படி கல்லால் நிறை . . . . . கழஞ்சே முக்காலே மஞ்சாடியும் அஞ்சுமாவும்

41. . . காற்காறை இரண்டினால் உரு நாலினால் மேற்ப்படி கல்லால் நிறை பொன் இரு கழஞ்சே மஞ்சாடியும் எட்டுமாவ

42. ரையும் இஷஹவாகந ஹேவர் திருவாபரண முதல் திருவஹிஷே[கம்] ஒன்றினால் குடிஞைக் கல்லால் நிறை பொன் முப்பத்து

43. [எ]ண் கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் ஒருமா முக்காணி அரைக்காணியும் திருமாலை ஒன்றினால் மேல்ப்படி கல்லால் நிறை பொ

44. ன் முக்கழஞ்சே ஆறு மஞ்சாடியும் மும்மா முக்காணியும் வாஹ ்வலையம் மேற்படி கல்லால்

45. நிறை பொன்னாற் கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் ஒன்பது மாகாணி அரைக்காணியும் திருக்கைக்காறை இ

46. ரண்டினால் உரு நாலினால் மேல்படி கல்லால் நிறை பொன் பன்னிரு கழஞ்சே எட்டு மாவரையும் திருக்க[ா]

47. ற் காறை இரண்டினால் உரு னாலினால் மேற்படி கல்லால் நிறை பொன் பதினொரு கழஞ்சரையே அரைமாவரைக்காணியும் இஷப

48. வாஹன தேவர் நம்பிராட்டியார் திருவாபரண முதல் திருவஹிஷேகம் ஒன்றினால் குடிஞரு கல்லால் நிறை பொன் பதின்எண் கழஞ்சேய் மு

49. க்காலே ஏழுமாவரையும் திருவும் நூலும் உரு இரண்டினால்

50. [எ]ட்டு மா முக்காணியும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 503/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	16
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1028
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	227,228/1961-62
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	3
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயில் தெற்கு ஜகதி

குறிப்புரை : முதலாம் இராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இவ்வூர் ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார் கோயில் பண்டாரத்திலிருந்து சிங்காளந்தகச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையினர் நூறு கழஞ்சு பொன்னைப் பெற்றுக் கொண்டு அதற்கு வட்டியாக ஆண்டுக்கு 166 கலம் இரு தூணி நெல் கோயிலில் அளந்து கொடுப்பதாக சம்மதித்தச் செய்தி கூறப்பட்டுள்ளது. அதே போன்று கோட்டூர் எனும் சோழவிச்சாதிரச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையினர் 40 கழஞ்சுப் பொன் பெற்றுக் கொண்டு 66 கலம், 2 தூணி நெல் கோயில் பண்டாரத்தில் வந்து அளந்திட சம்மதித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ திருமன்]னி வளர இருநிலமடந்தையும் போர் செயப் பாவையும் சீர்தனிச் செல்வியும் [தன்பெருந்தேவியராகி இன்புற]
2. இடைதுறை நாடுகூடர்வன வேலிபடர்வன வாசியுஞ் சுள்ளிச்சூழ் மதிட் கொள்ளிப் பாக்கையுந் நண்ணற் கருமுரண்
3. ஈழத்தரயர் தம்முடியுமாங்கவர் தேவியரோங் கெழில் [முடி]யும் முன்னவர் பக்கற்றென்னவர் வைத்த சுகர முடி
4. ஈழ மண்டல முழுவதும் எறிபடைக் கோளர் முறைமையிற் சூடும் [குலத]னமாகிய பலர் புகழ் முடியும் . . . .
5. வேலைத் தொல்பெருங்காவற் பல்பழஞ்வுஞ் செருவிற் சினவில் இருபத்தொரு காலரைசு களைகட்ட பரசுராமன் மேல் வருஞ் . . .
6. செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் முது கிட்டொளித்த செயசிங்கனைப் பெரும் புகழோடும்

7. பாடி ஏழரை இலக்கமும் நவநெதிக் குலப்பெரு மலைகளும் விக்கிரம வீரர் சக்கர கோட்டமும் முதிர்பட வல்லை மதுர மண்டல . . .

8. நாமனைக் கோனையும் வெஞ்சின வீரர் பஞ்சப்பள்ளியும் பாசடைப் பழன மாசுணி தேசமும் அயர்வில் வண் கீர்த்தி

9. . . . . குலத்திஹி தனை விளையமர்க் களத்துக் [கிளையோடும் பிடித்துப் பலதனத் தொடு திறை] . . . .

10. [குலதனக் குவையுங் கிட்டருஞ் செறிமினை] ஓட்ட விஷயமும் பூசுரர் சேர்நல் கோசலநாடுஹூபாலனை வெம்முனை அழித்து.

11. வண்டுறை சோலைத் த[ண்ட புத்தியும் இ]ரண சூரனை முரணுறத் தாக்கித் திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும் கோவிந்த சஹன்மா. . .

12. தங்காத சாரல் [வங்காள தேசமும்] தொடுகடல் சங்கு கொட்டல் மயில்பாலனை வெஞ்சமர் வளாகத்தஞ்சுவித்தருளி

13. ஒண்திறல் யானை[யும் பெண்டிர்] பண்டாரமும் நித்தில நெடுங்கடலுத்திர லாடமும் வெறிமலர்த் தீத்தத்து

14. தறிபுனல் கங்கையும் அலைகடல் நடுவுற் பலகலஞ் செலுத்திச் சங்கிராம வி[சயோத்]துங்கபஹூனாகிய கிடார

15. த்தரயனைய் வாகயம் யெருகடல் கும்பக்கரியோடு மகப்படுத்துரிமை[யில் பி]றக்கிய பெருநதிப் பிறக்க

16. மும் ஆர்த்தவன் அகநகர்ப் போர்த்தொழில் வாய்தலில் விச்சாதிர தோர[ண]மும் முத்தொளிர் புனைமணிப் புத

17. வமும் [கனமணிக்] கதவமும் நின்ற ஸ்ரீ விஜயமும் துறை நீர்ப் பண்ணையும் நன்மலையூரெயில்

18. [தொ]ன் மலையூரும் ஆழ்கடலகழ் சூழ் மாயிருடிங்கமும் கலங்கா வல்வினை இலங்காசோ[கமும் காப்புறு நி]

19. றை புனல் மாப்பாளமும் காவலன் புரிசை மேவலிபங்கமும் . . . வளைய கலைத்தக்கே

20. கார்புகழ் தலைதக்கோலமும் தீதமர்வல்வினை மாதமலிங்கமும் கலாமுரிக் கடுந்திறல் இலாமுரித்தேசமும் தேனக்கர்

21. பொழில் மானக்கவாரமும் தொடுகடற் காவல் கடுமுரட் கடாரமும் மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேஸரி வர்மரான

22. உடையார் ஸ்ரீ ராஜேந்ர சோழ தேவற்கு யாண்டு ௰ஃ ஆவ[து] ஜயங்கொண்ட சோழ மண்டலத்து பெருமூர் நாட்டு

23. [நடுவன்மலை சிங்காளந்தக*] . . . ஸுதுவெ²தி மங்கலத்து ஹொஸலெ . . .

24. எழுத்து மனையிற் கோட்டத்துப் புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய உஹாதெவர்

25. . . . ஸ்வரகன்மிகன் பக்கல் இத்தேவர் பண்டாரத்து யாங்கள் கொண்ட கடவ பொன் யநூ கட்டளைக்கல்

26. லால் துளை நிறை பொன் நூற்றுக் கழஞ்சு இப்பொன் நூற்றுக் கழஞ்சும் கொண்டு கடவோமாக கொண்ட பரிசாவது

27. பொன் கழஞ்சிநுக்கும் ஆண்டு பலிசை இராஜகேசரியால் அளந்து ஆக வந்த நெல் நூற்றறுபத்தறு கல

28. நே இரு தூணியும் ஆட்டாண்டு தோறும் சஜ்ராதித்தவற் கொண்டு இத்தேவர் திருமுற்றத்தே வந்து தேவர் கன்மிக

29. ள் வசம் பண்டாரத்து அளந்து தரவு கொள்வோமாகவும் இம்முதற்பொன் கொள்கவென்று சொல்லப்பெறா

30. தோமாகவும் இந்நநிறம்பில் ஆட்டாண்டுத்தோறும் நெல்லு வழுவாமை அளப்ப

31. பெறுவதாகவும் இம்மன்றபாடு இறுத்தும் இப்பலிசை ஆட்டாண்டு தோறும் நெல்லு . . களம் அளப்ப

32. . . . .ண்டவர்க்கும் மாவடை குடுப்பதாகவும் இப்படி இட்டுக்குடுத்தோம்

33. . . . து மங்கலத்தோம் பணிக்க எழுதினேன் இவூர் ஸ்தன நாக்கயண்ன்

34. னான பண்டிதப் பிரியனேன் இவை என் எழுத்து யாண்டு ௰ஈ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து

35. கன்றூர் நாட்டு கோட்டூராகிய சோழச்சதுர்வேதி மங்கலத்து சபையோம் யெழுத்து இக்கோட்டத்து புரிசை நாட்டு

36. உரோடகத்து ஸ்ரீராஜராஜஈஸ்வரமுடைய உடைய ஆதிதாஸ சண்டேஸ்வரன் பக்கல் இத்தேவர் பண்டாரத்து யாங்கள்

37. கொண்டு கடவ பொன் யநூக்கட்டளை கல்லால் துளை நிறை பொன் இப்பொன் நாற்பதின் கைக் கொண்டு கடவோம் கொண்ட பரிசாவது

38. பொன் கஞ்சினுக்கு வரை பலிசை இராஜகேசரியால் அளந்து ஆக வந்த நெல் அறுபது கலநே இரு தூணியும்

39. பண்டாரத்து அளந்து தரவு கொள்கவும் இம்முதற்பொன் கொள்கவென்று சொல்ல மாகவும் கை கொண்டு இதற்கு

40. . . நிசதம் நேர் பொன் அரசி பெறுவதாக

க.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 504/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1267
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	290/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊ.க.எண்	:	4
அரசன்	:	முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்			

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டபத் தென்புறம் நுழைவாயில் அருகில்

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகம் என்ற இவ்வூரிலுள்ள ஸ்ரீ ராஜராஜ ஈஸ்வரமுடைய மகா தேவர் கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு கூவம் என்ற தடாக சமுத்திர நல்லூரைச் சேர்ந்த வாசுதேவன் காராணை விழுப்பரையன் என்பவரின் மகள் ஆறைச்சியார் என்பவர் கொடையாக அளித்த ஒன்பது பணத்தையும் பெற்றுக்கொண்டு இக்கோயில் சிவபிராமணர்கள் விளக்கெரிக்க சம்மதித்தச் செய்திக் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ரு கோற்சட பன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யாரு வ
2. து ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீ இராஜ
3. ராஜிசுரமுடைய மாதேவற்கு கூவமான தியாக சமுத்திர நல்லூர் இருங்கணூர்க் கிழவன் வாசுதேவன் காரா
4. னை விழுப்பரையன் பி[ள்]*ளை ஆறைச்சியார் வைத்த சந்தி விளக்கு க இவ்விளக்கு ஒன்றும் இக்கோயில் சிவப்
5. பிராமணர் காஶிவ கோத்திரத்து உருத்திர பட்டனும் க[வு]ஶிக கோத்திரத்து ஆளவந்தார் பட்டனும் இவர்
6. பக்கல் கைக்கொண்ட பணம் கூ இப்பணம் ஒன்பதும் கைக்கொண்டு சந்திராதித்தவரை திருமுன்பே திச விளக்கு
7. எரிக்க கடவோமாக சம்மதித்தோம் உருத்திரபட்டனும் ஆளவந்தான் பட்டனும் இவ்வி
8. ருவோம் இது ஶிஶாஹெஶ்வர ரலிகை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 505/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1267
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	289/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊ.க.எண்	:	5
அரசன்	:	முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்			

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவர்.

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகம் என்ற இவ்வூரிலுள்ள இராஜராஜீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலுக்கு சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு மாத்தூர் கிழவன் வடுகன் இரா விழுப்பரையனின் பெண் பிள்ளை (மகள்) உமையாண்டை என்பவள் கொடையளித்த ஒன்பது காசுகளையும் இக்கோயில் சிவபிராமணர்கள் சிலர் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க சம்மதித்தச் செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மர் திரிபுனச்சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு ஸ ய்ரு வது
2. ஜ[ய]*ங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீஇராஜராஜிசுரமுடை
3. ய ம[ா]ஹா தேவற்கு இவ்வூர் மாத்தூர் [கி]ழவன் வடுகன் இரா விழுப்பரையன் பெண் பி[ள்]*ளை உ[மை] யாண்டை வைத்த சந்
4. தி விளக்கு க இ[வ்]*விளக்கு ஒன்றும் இக்கோஇல் சிவப் பிராமணர் காசிவ கோத்திரத்து உருத்திரபட்டனும் கவிசிக கோ
5. த்திரத்து ஆளவந்தான் பட்டனும் கை[க்கெ]*ாண்ட பணம் கூ இப்பணம் ஒன்பதும் கைக்கொண்டு சந்திராதித்தவரை சந்தி
6. விளக்கு திருமுன்பே திருவிளக்கு எரிக்க கடவோம் உருத்திர பட்டனும் ஆளவந்தான் பட்டனும் இவ்விருவோ
7. ம் இது ஸ்ரீ ஸாஹேசுர இ[ர*]கை

க.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 506/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1019
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	233/1961-62
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	6
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயிலின் அர்த்த மண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : முதலாம் இராஜேந்திர சோழனின் மெய்கீர்த்தியுடன் தொடங்குகிறது இக்கல்வெட்டு. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்துக் கன்றூர் நாட்டு கூவமான மதுராந்தக நல்லூர் உடன் சேர்ந்த சிற்றரையர் பூதூரான ஸ்ரீ மதுராந்தக சேரியிலுள்ள ஏரிக்கு பாலாற்றிலிருந்து நீர் பாய்கிற வாய்க்காலை இவ்வூர் ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய மஹாதேவற்கு இறையிலி தேவதானமாகக் கொடை யளித்து ஊரார்கள் கல்லில் வெட்டுவித்தச் செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநில மடந்தையும் போர்ச் செயப்பாவையுஞ் சீர்த்த

2. ன் பெருதேவியராகி இன்புறதெடு துயிலுாழியிடை துறை நாடு ந்துடர்வன வேலிப்படர்

3. [வன வாசியு]ஞ் சுள்ளி சூழ் மதிட் கொள்ளிப்பாக்கையு நண்ணற் கரு முரண் மண்ணைக் கடக்கமும் பெ[ா]

4. கடலீழத்தரைசர் தமுடியும் ஆங்கவர் தேவிய ரோங்கெழில் முடியு முன்னவர் பக்கற் றென்னவர் வைய்த்[த]

5. சுகர முடியும் இகிரனாரமு தெண்டிலை ஈழ மண்டல முழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடுங்

6. குலதனமாகிய பலர் புகழ் முடியுஞ் செங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலைத் தொல் பெருங் காவற் பல்ப

7. ழஞீபவுஞ் செருவிற் சினவி இருபத்தொரு காலரைசு களைகட்ட பரசுராமன் மேல் வருஞ்சாஞிபற்றீய் வர[ன்]

8. கருதி இருத்திய செம்பொற்றிருத்தகுமுடியு[ம்*] மாபொரு தண்டாற் கொண்ட கோப்பரகேஸரி வர்மரான ஸ்ரீராஜே

9. நுசோழ தேவற்கு யாண்டு எ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்துக் க

10. ன்றூர் நாட்டு கூவமான மதுராந்தக நல்லூர் ஊரோம் எங்களூரோடும் ஏறின சிற்[ற*]ரையர் பூதூரா[ன*] ஸ்ரீ [மது]

11. ராந்தக சேரிய் ஏரிய்க்கு பாலாற்றின் நின்[றே]ய் பா[ய்*]ந வாய்க்காலுக்கு கீழ்பாற்கெல்லை சிற்றரையர் பூதூரான ஸ்ரீ மதுரா

12. ந்தகச்சேரி எல்லையக்கு மேற்க்கும் தென்பாற் கெல்லை ஸ்ரீராஜராஜ-ம்-ஸ்வர முடையார் தேவதானம் உரோடகத்து எ

13. ல்லைக்கு வடக்கும் மேல்பாற் கெல்லை இவ்வூர் [உ*]ரோடகத்து எல்லைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை உரோடகத்து நிலத்

14. துக்கு தெற்கும் ஆக இன்னான் கெல்லை உள்ளும் அகப்பட்ட சிற்றரையர் பூதூர்[ா] ஏரிய்க்கு பாயந்த ஆற்றுக்கால் ஸ்ரீராஜரா

15. ஜ-ம்-ஸ்வரமுடைய உஹாதேவற்க்கு இறைஇலி தேவதானமாக உதக வாவ[ம்*] செய்து ஸிலாலேகை செய்து குடுத்தோம் கூவ

16. மான மதுராந்தக நல்லூர் ஊரோம் ஊர் சொல்ல எழுதினேன் கருங்கணங் கிழவன் சட்டி சாூனேன் இவையென்

17. எழுத்து ।–

க.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 507/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1045
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	234/1961-62
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	7
அரசன்	:	முதலாம் இராஜாதிராஜன்			

இடம் : சிவன் கோயிலில் அர்த்த மண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : முதலாம் இராஜாதிராஜன் மெய்கீர்த்தியுடன் தொடங்குகிறது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசைநாட்டு சிவபுரத்து ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடையார்க் கோயிலில் ஆதித்த வாரம்(ஞாயிறு)தோறும் இறைவனை ஆதித்த வாரப் பெரும்பலி எழுந்தருளச் செய்து சிறப்பு வழிபாடு நடத்துவதற்காக இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டிருந்த பழந்தேவதானம் துப்புரவு பத்து என்ற நிலத்திலிருந்து காணிக்கடனாக ராஜகேசரி என்ற அளவால் நெல்லு முப்பத்துநாற்கலம் பெறப்பட்டு வந்தது. இதற்கு காலளவு பறி கூறியாக ஒவ்வொரு கலநெல்லுக்கும் முன்னாழி உரி நெல் வாசியாக ஏற்றி முப்பத்தைந்து கலநே பதக்கு எழுநாழி நெல் என்று நிர்ணயிக்கப்பட்டது. இதிலிருந்து,

(1) கனியமுதுக்கும் திருவமுதுக்கும் ஓராண்டுக்கு முக்கலநே முக்குறுணியும்

(2) திருவாராதனை செய்வார், திருஉண்ணாழிகை உடையார், மாணிகள் அறுவர், பதியார் 24 பேர், பஞ்சாசாரியர், வீணை வாசிப்பான், உடுக்கை வாசிப்பான், திருப்பதியம் பாடுவான், திருவாய்க் கேழ்வி உடையான், பாடவியன் உள்ளிட்ட உவச்சர் பதின்மர், கவரி பிணாக்கள் 12பேர், திருப்பள்ளித் தொங்கலிடுவார் நால்வர், கணக்கன், பண்டாரி, திருமெய்காப்பார் நால்வர், திருப்பள்ளித் தாமம் பறித்துக் தொடுப்பான்- ஆகியோருக்கு ஒருபங்குக்கு பதக்கு நெல் வீதம் 55 பங்குக்கு ஓராண்டுக்கு 29 கலனே துணிக்குறுணி நாநாழியும்

(3) விளக்குப் பிடிப்பார் நால்வர், கொடிப்பிடிப்பார் நால்வர், ஆகியோருக்கு நெல்லு இருகலன்

ஆகமொத்தம் முப்பத்தைந்து கலன் பதக்கு ஏழுநாழி நெல் அளிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திங்களேர்த்தரு தன் றொங்கல் வெண்கு[ை]டக்கீழ் நிலமகள் நிலவ மலர் மகட் புணர்கு செங்கோலோ

2. ச்சிக் கருங்கலி கடிகு மன்னு பல்லூழியில் தென்னவர் மூவருள் மானாபரணன் பொன்முடி ஆனாப்பருமதிப் பசு

3. கலைபொருகளத்தரிகு வீரகேரளனை யானைக் கிடுவித்து சேவிற் சுகர பாண்டியனைத் திசை கெடத் தொல்லையுள்

4. முல்லையூர்த்துரத்தி யொல்கலில் வேணாட்டரைசைச் சேணாட்டொதுக்கி மேவுபுகழ் மிராய குடி மூவர் கெட முநி

5. கு வேலைகெழு காஞ்சிளூர்ச் சாலை கலமறுத்தாகவமல்லனும் அஞ்ச கேவுதன்றாங்கரும் படையால் ஆங்கவன் சே

6. னையுள் கண்டப் பையநுங் கங்காதரனும் வண்டமர் களிற்றொடு மடிய திண்டிறல் விருதர் விக்கியும் விசையாதித்[த]

7. நுங் கருமுன் சாங்க மையய முதலினர் [சமரபீருவொத] துடைய நிமிர் சுடர் [பொன்னோடு அய்ங்க]ரிப் புரவியோடும் பிடித்

8. து தந்நாடையில் ஜயங்கொண்டொன்னார் கொள்ளிப்பாக்கை யுள்ளெரி மடுத்து வில்[லவர்] மீனவர் வெஞ்சினச்சளுக்கி

9. யர் வல்லவர் முதலெந வணங்க வீற்றிருந்த ஜயங்கொண்ட சோழன் உயர்ஞ பெரும்புகழ்க் கோவிராஜகேசரிவரான உடையார்

10. ராஜாயிராஜ தேவர்கு யாண்டு உலக ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்துப் புரிசை நாட்டுச் சி

11. வபுரத்து ஸ்ரீ ராஜராஜ·ஈஸ்வரம் முடையார்க்கு ஆதித்த வாரந்தோறும் ஆதித்த வாரப் பெரும்பலி எழுந்தருளுகைக்கு நிவகஞ் செய்த பரி

12. சாவது இத்தேவர் பழந்தேவதானம் துரப்புவால் பத்தும் ராஜகேசரியால் காணிக்கடன் ெ[ந]ல்லு முப்பத்து நாற்கலம் இவற்

13. றுக்கு காலளவுறை பறி கூலி கலத்துவாய் முன்னாழி உரி வாசி ஆக ஏறு நெல்லுக்கலநே பதக்கெழுநாழியும் ஆக ஏற்றி நெல்லு

14. முப்பத்தைங்கலநே பதக்கெழுநாழி இவற்று . . . வதம் [கறிகளுக்குஇ ருவமுது உரிக்கு] இரு நாழிக்கு நெல் ஐஞ்ஞாழி

15. யும் கறியமுதுக்கு நெல்லு நாழியும் ஆக ஓராண்டிநுக்கு நெல்லு முக்கலநே முக்குறுணியும் திருவாராதனை செய்வானுக்கும் திருவுண்ணா

16. ழிகை உடையார்களுக்கும் மாணிகள் அறுவருக்கும் பதியார் இருபத்து நால்வர்க்கும் பஞ்சாசாரியர்க்கும் வீணை வாசிப்பானுக்கும் உடு

17. க்கை வாசிப்பானுக்கும் திருப்பதியம் பாடுவானுக்கும் திருவாய்க் கேழ்வி உடையானுக்கும் பாடவியனுள்ளிட்ட உவச்சர் ஒருபதின்மரு

18. க்கும் கவரி பிணா[க்*]கள் பன்னிருவர்க்கும் திருப்பள்ளித் தொங்கலிடுவார் நால்வர்க்கும் கணக்கனுக்கும் பண்டாரிக்கும் திருமெய்[க]ாப்பார் நால்

19. வ[ரு]க்கும் திருப்ப[ள்*]ளித்தாமம் பறித்துக் தொடுப்பானுக்கும் பதக்கு நெல்லுக்குப் பங்கு ஒன்றாக வ ஆ பங்கு ஐம்பத்தைஞ்சுக்கு இ

20. [வை] பங்கொன்றினுக்கு ஆண்டு வரை நெல்லு தூணி பதக்கு நாநாழி ஆக வ நெல்லு இருபத்தொன்பதின்கலனே தூணிக்[கு]

21. றுணி நாநாழியும் விளக்குப்பிடிப்பார் நால்வர்க்கும் கொடிப்பிடிப்பார் நால்வர்க்கும் நெல்லு இருகல மே

22. [ந] முப்பத்தைங் கலநே பதக்கெழு [நாழி] . . . .[ப]நூஹேஹஷ்வ ஈஸ்கெஷி-

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 508/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	8
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1020
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	8
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டபக் கிழக்குப்புறம்

குறிப்புரை : முதலாம் இராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய மகாதேவர் என்ற இறைவனுக்கு திருநந்தா விளக்கு இரண்டு எரிப்பதற்கு மன்னர் முதலாம் இராஜேந்திர சோழ தேவரே 180 ஆடுகள் கொடையளித்தச் செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. திருமன்னி வளர இரு நில மடந்தையும் போற் செயப்பாவையும் சீர்த்தனிச் செல்
2. வியும் தன்பெருதேவியராகி இன்புற நெடிதியல் ஊழிஉள் இடைது[றை] நாடும் படர்வன
3. வாசியும் [படர்வன வாசியும்] சுள்ளி சூழ் மதிள் கொள்ளிப் பாக்கையும் நண்ணற் கருமுரண் மன்[ணை]
4. க்கடக்கமும் பொருகடல் ஈழத்தரையர் தம்முடியும் ஆங்கவர் தேவியரோங் கெழில் முடி
5. யும் முனிவர் பக்கல் தென்னவன் வைத்த சுகரமுடியும் இகரனாரமும் தெண்டிரை ஈழ
6. மண்டல முழுவதும் எறிபடைக் கோளன் முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர் புகழ்
7. முடியுஞ் செங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலைத் தொல்பெருங்காவற் பல் பழஞீய்வுஞ் செரு

8. வி[ற்சினவி] இருபத்தொரு காலரைசு களைகட்ட பரசுராமன் மேல் வருஞ்சாஞ்மற்றீய்வரன் கருதி இரு

9. த்திய செம்பொற்றிருத்தகு முடியு[ம்*] மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி பன்மரான ஸ்ரீராஜேந்ர சோ

10. ழ தேவர்க்கு யாண்டு அஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மனையிற் கோட்டத்து புரிசைநாட்டு உரோடகத்

11. து ஸ்ரீமராஜமராஜ·ம·ஸ்வரமுடைய உஹ[ர*] தேவர்க்கு உடையார் ஸ்ரீராஜேந்ர சோழ தேவர் வைய்த்த திருநந்தா விளக்கு இரண்டினா

12. ல் ஆடு நூற்றெண்பது :-

த.நா.அ. தொல்லியல் துறை			**தொடர் எண் : 509/2013**		
மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	21
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1033
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	280/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	9
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டப வடக்குச் சுவர்

